## சுந்தரம் பாசனர்ஸ், கிளேட்டன், பிரேக்ஸ் இந்தியா டி.வி.எஸ். மோட்டார்ஸ், பிரேக் லைனிங் வரிசையில்

# லூகாஸ் டி.வி.எஸ். நிறுவனம் ஜப்பான் தர விருது பெற்றது

## சபாஷ்! டி.கே.பாலாஜி

சென்னை, நவ. 18-

பாரம்பரியம் மிக்க டி.வி.எஸ். குருப் நிறுவனமான லூகாஸ் டி.வி.எஸ். நிறுவனத்துக்கு ஜப்பான் நாட்டின் டெம்மிங் தர விருது கிடைத்துள்ளது.

உற்பத்தியாகும் பொருள் அனைத்தும் தரம், தொடர்ந்து நிறுவனத்தில் வளர்ச்சி ஊழியர்களுக்கு தொடர்ந்து நவீன பயிற்சி, வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி உள்ளிட்டவை தொடர்பான விதிமுறைகளை சிறப்பாக செயல்படுத்தியதற்காக இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.

ஜப்பானிய என்ஜினியரிங் சாதனை யாளர்கள், விஞ்ஞானிகள் கூட்டாக நிறுவியது டெமிங் விருது ஆகும். இது உலக தர சாதனங்களை தயாரிக்க வலியுறுத்துகிறது. கடுமையான விதிகளை அமல்படுத்துகிறது. இதை கடைப்பிடித்து லூகாஸ் டி.வி.எஸ். இந்த விருது பெற்றுள்ளது.

இந்த விருதினால், இதன் தயாரிப்புகள் இந்தியாவில் ஓடும் 4 வாகனங்களில் 3 வாகனங்கள் இடம் பெற்றுள்ளது சிறப்பு அம்சமாகும்.

இந்த பரிசை பெறும் டி.வி.எஸ். குழுமத்தின் 5-வது நிறுவனம் டி.வி.எஸ். லூகாஸ், ஏற்கனவே சுந்தரம் கிளேட்டன், டி.வி.எஸ். மோட்டார்ஸ், பிரேக் லைனிங், பிரேக்ஸ் இந்தியா ஆகிய டி.வி.எஸ். குருப் நிறுவனங்கள் டெம்மிங் விருதை பெற்றுள்ளன. இந்தியாவில் இதுவரை 10 நிறுவனங்களுக்கு இப்பரிசு கிடைத்துள்ளது.

டெம்மிங் பரிசு குறித்து லூகாஸ் டி.வி.எஸ். நிறுவன நிர்வாக இயக்குனர் டி.கே.பாலாஜி கூறியதாவது:-

ஆட்டோ எலக்ட்ரிக் சாதனங்களான ஸ்டார்ட்டர்ஸ், ஆல்ட்டர்நேட்டர்ஸ், பவர் விண்டோ மோட்டார்ஸ் உள்ளிட்டவற்றை லூகாஸ் டி.வி.எஸ். உற்பத்தி செய்து



ஜப்பான் நாட்டு டெமிங் தர விருது அமைப்பின் யசுக்கோஷி வாசியோ, லூகாஸ் டி.வி.எஸ். சேர்மன் டி.கே. பாலாஜிக்கு வழங்கினார். ஜப்பான் நாட்டு தூதர் ரியூகோ கிகுசி உடன் உள்ளார்.

வருகிறது. இந்த நிறுவனம் தொடங்கிய 40 ஆண்டுகளில் இதுவரை 2½ கோடி சாதனங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. இந்த ஆண்டில் 20 லட்சம் சாதனங்களை தயாரிக்க திட்டமிட்டுள்ளோம்.

டெம்மிங் தொழில்நுட்ப விதிமுறை களை கடந்த 1998-ம் ஆண்டு முதல் செயல்படுத்தி வருகிறோம். இதன் மூலம் ஒரு குறைபாடு கூட இல்லாத வாகன உதிரிபாக சாதனங்களை பெற்ற வாடிக்கை யாளர்களின் எண்ணிக்கை 12 சதவீதத்தில் இருந்து 85 சதவீதமாக அதிகரித்தது.

நடப்பு நிதியாண்டில் வர்த்தகத்தை ரூ. 605 கோடியாகவும் 2010-ல் ரூ. 1500 கோடியாகவும் அதிகரிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அதுபோல் ஏற்றுமதி வர்த்தக அளவை ரூ. 40 கோடியில் இருந்து 400 கோடியாக உயர்த்த திட்டமிட்டுள்ளோம்.

### ஈரானில் புதிய தொழிற்சாலை

இன்னும் 2, 3 ஆண்டுகளில் ஈரானில் சைபா நகரில் புதிய தொழிற்சாலை தொடங்கப்படும் என்றார் பாலாஜி.

நிறுவன பிரசிடெண்ட் எஸ். ரவிச்சந்திரன், நிர்வாக துணைத் தலைவர் ஏ. ஆராவமுதன், செயல் இயக்குனர் கே.ஆர் அனந்தகுமரன் நாயர் ஆகியோர் உடனிருந்தனர்.